[17th March 1966

திரு. நா. இராசாங்கம் : பத்து லட்சம் ரூபாய் கிராமப்புறங்களில் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்திற்காக ஒதுக்கி இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படியானால் குறைந்தபட்சம், உயர்ந்தபட்சம் எவ்வளவு ஒரு வீட்டிற்கு இருக்கும்? வீடுகள் கட்டிக் கொடுக்க கேட்கிறவர்களுக்கு வருவாய் எவ்வளவு இருக்கவேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போதிருக்கிற திட்டப்படி கிராமப்புறங்களில் வீடு கட்டும் திட்டத்திற்காக 3,000 ரூபாய் வரை கொடுக்கலாம். 80 சத விகிதம் வீடு கட்டுவதற்காக கடனாகக் கொடுக்க முடியும். அதற்குத் தகுந்த அளவு நிலம் முதலிய ஜாமீன்கள் தேவைப்படும் என்று நினைக்கிறேன்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : எல்.ஐ.சி.-யிலிருந்து கொடுக்கும் 296 லட்சத்தில் கிராமப்புறங்களுக்கு 10 லட்சம் தான் ஒதுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது கடலில் கரைத்த பெருங்காயம் போல் இருக்கிறது. நகர்ப்புறங்களில் கட்டும் வீடுகள் பெரிய பணக்காரர்களுக்குத்தான் உதவியாக இருக்கிறது. கிராமப் புறங்களில் மேலும் பல விண்ணப்பங்கள் வரக் காத்துக்கொண்டிருக்கின்றன. ஆகவே, அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து கிராமப்புறங்களுக்கு குறைந்தது பாதியாவது ஒதுக்க முயற்சிப்பார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : வீட்டுவசதியானது நகரங்களில்தான் மிகவும் அதிகமாக வேண்டி இருக்கிறது. காரணம் என்னவென்றால் பலர் நகரங்களுக்கு வேலை வாய்ப்பு தேடி வந்து விடுகிறார்கள். பலர் குடிசைப் பகுதிகளை எல்லாம் அமைத்து விடுகிறார்கள். ஆகவே, இங்கு அதிகம் தேவைப்படுகிறது. கிராமங்களைப் பொறுத்தவரையில் இந்த பத்து லட்சம் ரூபாய் முதல் ஒதுக்கீடாகச் செய்கிறோமே தவிர, அதிகமாகத் தேவைப்பட்டால் சர்க்கார் அதற்கு வேண்டிய உதவியைச் செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

* 321 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any cut has been effected in the funds allotted to the State Housing Board for its construction work in the various districts of the State, in view of the Emergency; and

(*b*) if so, its extent and how far it would affect the works already begun and pending?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No.

(*b*) Does not arise.

திரு. வை. சங்கரன் : எமர்ஜன்சி காரணமாக ஏதாவது திட்ட வேலைகள் பரிபூர்ணமாக நிறுத்தப்பட்டிருந்தனவா ? அப்படியானால் அங்கு பழையபடி எப்போது வேலைகள் ஆரம்பிக்கப்பட இருக்கிறது ?

17th March 1966]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எமர்ஜன்சி காரணமாக சப்சிடைஸ்ட் இன்டஸ்ட்ரியல் ஹௌசிங் என்று சொல்லக் கூடிய தில் சப்சிடியைத்தான் நிறுத்தி வைத்திருக்கிறோம். இந்த மூன்று கோடி கிடைப்பதற்கு முன்னால் நிலைமை எப்படி இருக்கும் என்று சொல்வதற்கில்லை என்று இருந்தோம். இந்தப் பணம் வந்த பிறகு திட்டம் நிறுத்தி வைக்கப்படவில்லை.

திரு. வை. சங்கரன் : பல லேபர் ஹௌசிங் ஸ்கீம்ஸ் எமர்ஜன்சி காரணமாக நிறுத்தப்பட்டிருந்ததா ? அவர்களுக்கு இப்போதாவது ஸ்டேட் ஹௌசிங் போர்டுக்கு கொடுத்த பணத்திலிருந்து அதை ஆரம்பித்து நடத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நிறுத்தி வைக்கப்படவில்லை. சப்ஸிடி கொடுப்பதற்கில்லை என்றுதான் சொல்லியிருக்கிறோம். அவர்கள் முழுப் பணத்தையும் கடனைத் திருப்பிக் கொடுப்பதாக இருந்தால், பார்த்து கடன் கொடுக்க ஏற்பாடு செய்ய முடியும். அதேபோல் இப்போது கடன் மனு செய்தால் சர்க்கார் பரிசீலனை செய்யும்.

திரு. நா. இராசாங்கம் : லோயர் இன்கம் க்ரூப்பிற்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டப்படி வீடு கேட்கிறவர்களுக்கு அவர்களுக்கு மாத வருவாய் எவ்வளவு இருக்கவேண்டும் ? அதில் எத்தனை வகைகளில் மதிப்பீடுகள் இருக்கின்றன ? ஒவ்வொரு மதிப்பீட்டிற்கும் எவ்வளவு எவ்வளவு முதலில் செலுத்தவேண்டும் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : லோ இன்கம் க்ரூப்பில் வேண்டுமென்றால் 500 ரூபாய்க்கு குறைவான வருமானம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். 500-க்கு மேல் 1,250 ரூபாய் என்றால், மிடில் இன்கம் க்ரூப் வீடுகள் அனுமதிக்கப்படும். என்னென்ன டைப் டிஸைன்ஸ் என்று இப்போது சொல்ல இயலாது. எவ்வளவு கடன் கொடுக்கிறோம் என்றால் வீடுகளின் அமைப்பைப் பொறுத்து அந்த அளவிற்குக் கொடுக்கப்படுகிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்த வீட்டு வசதி போர்டுக்கு அரசாங்கம் தருகிற பணம் மத்திய அரசாங்கத்திலிருந்து கிடைக்கிற மானியம், கடன், எல்.ஐ.சி. யிலிருந்து கிடைப்பது இவ்வளவையும் கொண்டு காரியங்கள் நடத்தப்படுகின்றன. இந்தப் பணம் போதவில்லை என்ற நிலைமை இருப்பதால், இன்னும் அதிகப் பணம் கொண்டு வருவதற்காக லாட்டரி சீட்டுகள் போடுவது, பொதுக் கடன் எழுப்புதல் ஆகிய முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபடுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எவ்வளவு பணம் இருந்தாலும் வீட்டு வசதிக்கு போதாது என்பதை எல்லோரும் ஒத்துக் கொள்வர். அதற்காக லாட்டரி சீட்டு போடவேண்டும் என்பதை இந்த சர்க்கார் ஒத்துக்கொள்ளவில்லை. ஒருவேளை வேறு சர்க்கார் வந்தால் லாட்டரி போடுவார்களோ என்னவோ தெரியாது. கடன் எழுப்பும் விஷயத்தில் சர்க்கார் எழுப்பியிருக்கிற கடன்களுக்கே போதிய அளவு பணம் கிடைப்பதில்லை, மேலும் கடன் எழுப்புவது கஷ்டமாக இருக்கிறது.